


தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் தற்போது
நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பத்மாதேவி பாலசுந்தரம்

அவர்களின்

# நினைவு மலர்

18.05.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்
தற்போது நாயன்மார்கட்டில் வசித்தவருமான

அமரர்

# திருமதி பத்மாதேவி பாலசுந்தரம்

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**18.05.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம் ;



**அன்பைச் சொரிந்து பண்பை வளர்த்து**

**உற்ற வழிகாட்டி உலகில் நாமுயர**

**ஏணிப்படியாய் எம்முடன் இருந்து**

**எம்மையெல்லாம் மாண்பு பெற வைத்துவிட்டு**

**விண்ணுலகேகிய எம் அன்புத் தெய்வத்தின்**

**பொன்னடிகளில் இம்மலரினை சமர்ப்பிக்கின்றோம்.**

**–குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மலர்வு 25.04.1935

உதிர்வு 18.04.2010

அமரர்

# திருமதி பத்மாதேவி பாலசுந்தரம்

## திதிவெண்பா

விளங் காண்டு விகிர்தியதில் வினமாதம் சித்திரை
ஆளந் தாண்டு அமை திதி சதுர்த்தசியில் உளந்தாண்டும்
சீர் வளர் பத்மாதேவியெனும் அம்மையார்
பேரின்பப் பேறுற்றார் பெயர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏத்தா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங்குவனெப் பொழுதும்
தோற்றா தெக்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரி யாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந்தேனே
அளிவளருள்ளத் தாநந்தக் கனியே
அம்பலமாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தூயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆநந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணனேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

## பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களா யங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்யவிரு
கைப்பறத்தி லேத்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி.

## மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கும மங்களம்
ஐயமிட் (டு) உண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆண்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்கும் மங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

– நற்சிந்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லை இரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகங் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்அசுரர் ஆகிய முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனா அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

ஈழத்தின் மணிமுடியாக விளங்கும் யாழ்ப்பாண நன்னகரிலே சோலைகளும், கல்விச்சாலைகளும், அருள்மிகு ஆலயங்களும் சூழ்ப்பெற்ற தெல்லிப்பழைக் கிராமத்திலே சரவணமுத்து பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாக ஆயிரத்துத் தொழாயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டு சித்திரை மாதம் இருபத்தைந்தாம் திகதி பத்மாதேவி அவர்கள் பிறந்தார்கள்.

இவரின் உடன்பிறப்புகள் திருமதி கமலாதேவி சதானந்தன், அமரர் புஸ்பதேவி விவேகானந்தன் ஆகியோராவார். பத்மாதேவி அவர்கள் இளமையிலேயே அறிவும், ஆற்றலும், ஆளுமையும் மிக்கவராக விளங்கினார். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஆங்கில மொழியில் சிரேஸ்ட தராதரப் பரீட்சையில் சித்தியெய்தியது மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் தேர்ச்சி மிக்கவராகத் திகழ்ந்து அன்பும் பண்பும், அமைதியும் தன்னகத்தே கொண்டவராகவும் விளங்கினார்.

1960 ஆம் ஆண்டிலே சண்டிலிப்பாயைச் சேர்ந்த இராசையா சிவக்கொழுந்து தம்பதியினரின் அருந்தவப்புதல்வனாகிய பாலசுந்தரம் அவர்களை மணம் புரிந்தார். இவர்களின் இல்லற வாழ்க்கையில் இணையற்ற செல்வங்களாக வீரராகவன், கீதா, விஜிதா, வாசுகி ஆகிய மக்கள் வந்துதித்தனர். 1984ஆம் ஆண்டில் மாரடைப்பினால் தனது கணவனை இழந்த இவர் தனது பிள்ளைகளை நல்லமுறையில் வளர்த்து ஆளாக்கினார்.

மூத்தமகன் வீரராகவன் கோப்பாயைச் சேர்ந்த திரு. திருமதி தம்பிராசா அவர்களின் சிரேஷ்ட புத்திரியாகிய இராஜேஸ்வரி அவர்களைத் திருமணம் புரிந்து ஆர்த்திகா என்ற குழந்தையைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மகள் கீதா உடுவிலைச் சேர்ந்த திரு. திருமதி ஈஸவரானந்தன் தம்பதியினரின் ஏக புதல்வன் விஜேந்திரனை மணம்புரிந்து ஆரபி, ஆர்லிங்கன் ஆகிய குழந்தைகளுடன் சுவீடன் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

மூன்றாவது மகளாகிய விஜிதா வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. திருமதி நடராஜா தம்பதியினரின் புதல்வரான சபாரட்ணசிங்கி அவர்களைத் திருமணம் செய்து தர்ஷிகா, கஜநாத் ஆகிய குழந்தைகளைப் பெற்றனர்.

இளைய மகளாகிய வாசுகி நாயன்மார்கட்டைச் சேர்ந்த திரு. திருமதி நிற்சிங்கம் தம்பதியினரின் கனிஷ்ட மகனான தயாநந்தனை மணம் புரிந்து வர்ஷா, கிரிஷன் ஆகிய இரு குழந்தைகளைப் பெற்றனர்.

பாசம் மிக்க மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் சிறப்புற வாழ்ந்து வந்த இவர் தனது 75 ஆவது வயதில் 18-04-2010 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிப 3-12 மணிக்கு சதுர்த்தி திதியில் இறைபதம் அடைந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம் பொருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## பேரப்பிள்ளைகளின் பிரிவாற்றாமை

தாலாட்டி சீராட்டி பாராட்டிட
பாட்டி இருக்கின்றாவென யாமிருக்க
காலமது பிரித்துக் கடத்தியதே
கவலையுற்றே! கதறி யழுகின்றோம்
வேளை முழுதும் அருகிருந்தே காப்பீரகளென்றிருக்க
விரைந் தெங்கே சென்றீர்கள் பாட்டி
நீள நினைந் திருப்போம் பாட்டி உங்களை
நெஞ் சமெல்லாம் உங்கள் நினைவுகளுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரும் அகத்தியரும்

கவிஞர். வி. கந்தவனம்.





அகத்தியர் என்பர் குறுமுனிவர்
ஆயினும் தவத்தினிற் பெருமுனிவர்
மிகப் பழங்காலத்தில் வாழ்ந்துவந்தார்
விருப்புடன் சிவனடி வணங்கி வந்தார்.

தமிழ்திரு நாட்டினில் அவர் ஒருநாள்
தங்கிய காலத்திற் காகம் ஒன்று
கமண்டல மீதினில் வந்திருந்து
கவிழ்ந்துநல் நீரினை ஊற்றியது.

காகம் இருந்த குடத்தினிலே
காட்சி அளித்தனன் ஒரு சிறுவன்
கோபம் மிகுந்திடக் குறுமுனிவர்
குழப்படிப் பெடியனைக் குட்டவந்தார்.

அழகிய சிறுவனும் ஓடலுற்றான்
அகத்திய முனிவரும் துரத்தலுற்றார்
இளையவன் ஓடிட முனிவர் பிரான்
இடையினிற் களைப்புவந் திருந்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயம் மறைந்தனன் அச் சிறுவன்

அவ்விடம் தோன்றினர் ஆனை முகன்

விதம் வித வேடத்தில் விநாயகரா?

விளங்கினர் உண்மையை அகத்தியனார்.

உன் தலை மீதினிற் குட்ட வந்தேன்

ஓ! பிழை பொறுத்திட வேண்டுமென்று

தன் தலை மீதினிற் குட்டி மிகத்

தாழ்ந்து வணங்கினார் தமிழ் முனிவர்

உன் பெயர் உன்திறன் உலகமெல்லாம்

ஓங்குக ஓங்குக என்று சொல்லி

அன்புடன் பிள்ளையார் அருள்புரிந்தார்

அகத்திய மாமுனி மனம் மகிழ்ந்தார்.

காகமாய் கணபதி வந்தருளி

கவிழ்ந்த அக் கமண்டல நீர்பெருகி

ஆகியோர் ஆறெனப் பாய்கிறதாம்

அதன்பெயர் அழகிய காவிரியாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிப் பூ

மின்னி மின்னி ஒளிவீசும்
சின்னச் சின்ன வெள்ளிப்பூ

ஏனோ மேலே நீசென்றாய்?

வானில் வைரம் போலுன்னைப்
பதித்தார் யாரோ நீசொல்வாய்

மூலம் :- Twinkle Little Star.

## மழையே பெய்யாதே

மழையே மழையே பெய்யாதே
மீண்டும் ஒருநாள் வருவாயே

சின்ன மோகன் விளையாடத்
தோழ ரோடு போகின்றான்

மழையே இன்று பெய்யாதே
மீண்டும் ஒருநாள் வருவாயே.

மூலம் :- Rain Rain Go Away.

## ஆடே வா

செம்மறி ஆடே வாவாவா
கம்பளி மயிர்கள் உண்டோசொல்

ஆம்ஆம் மூன்று மூடைதான்

அதனில் ஒன்று தலைவர்க்கு
மற்ற ஒன்று தலைவிக்கு

வீதி அருகே வாழ்கின்ற
சிறுவ னுக்கும் ஒன்றாகும்.

மூலம் :- Baa Baa Black Sheep. .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகர வரிசை

அணிலே அணிலே வாஓடி
அசைந்து அசைந்தே வாஓடி

ஆட்டுக் குட்டி வாஓடி
ஆலம் இலை நான் தந்திடுவேன்

இலையும் பூவும் ஆய்ந்திடுவோம்
இரண்டு மாலை கட்டிடுவோம்

ஈயே எங்கே போகின்றாய்?
ஈயே இனிய தேன்தாரும்

உலையில் அரிசி போட்டேநாம்
உணவை உண்ணச் சமைத்திடுவோம்

ஊசி ஊடே நூல்கோத்தே
உடைகள் பலவும் தைத்திடுவோம்

எலியே எலியே போபோபோ
எனது நூலைத் தின்னாதே

ஏணி மரத்தில் சாய்த்திடுவோம்
ஏறி மாங்காய் ஆய்ந்திடுவோம்

ஐயர் திறந்தார் ஆலயத்தை
ஐந்து விளக்கு ஏற்றிவைத்தார்

ஒன்று இரண்டு மூன்றுமுதல்
ஒன்பது பத்து எண்ணுவாயே

ஓலை பனையில் வெட்டிடுவோம்
ஓலைப் பெட்டி இழைத்திடுவோம்

ஔவைப் பாட்டி பாடியதாம்
ஆத்தி சூடி பாடிடுவோம்

எஃகில் செய்த கத்தியினை
எடுத்துப் பழத்தை வெட்டிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TELEPHONE DIRECTORY

## TELEPHONE NUMBERS

## SRILANKA TELEPHONE, JAFFNA

| | |
|---|---|
| **RTOM** | **0212222231** |
| **OPMC** | **0212223061** |
| **BILLING** | **0212222243** |
| **FAULT** | **0212222243, 0212222211.** |

**SCHOOL NUMBERS**

| | |
|---|---|
| *Jaffna Hindu College* | *0212222431* |
| *Chundikuli Girl's College* | *0212222338* |
| *Jaffna Central College* | *0212222184* |
| *Chavakachcheri Hindu College* | *0212227640* |
| *Jaffna Hindu Ladies College* | *0212222346* |
| *Jaffna Hindu Primary School* | *0212222119* |
| *Harty College* | *0212223292* |
| *Jaffna College Vaddukoddai* | *0213212531* |
| *Kokuvil Hindu College* | *0212222646* |
| *Jaffna Central College* | *0212222184* |
| *Karaveddy Vikneswara College* | *0212223138* |
| *Kopay Cristian College* | *0212226840* |
| *Nelliyady Central College* | *0212223017* |
| *Royal College* | *0112695256* |
| *Ramanathan Hindu Ladies College* | *0112581140* |
| *St. John's Bosco* | *0212222540* |
| *St. John's College* | *0212222432* |
| *St. Patrics College* | *0212222388* |
| *St. James M.V* | *0212223422* |
| *St. James M.V (Boys)* | *0212226947* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *Vembady Girl's College* | *0212222187* |
| *T/ Hindu College* | *0212222424* |
| *Uduvil Girl's College* | *0212223300* |
| *Vaithiswara College* | *0212223322* |
| *Victoria College* | *0212225405* |
| *Vavuniya Maha Vidyalayam* | *0242222424* |
| *Colombo Vivehanantha College* | *0112431120* |
| *Stanely College* | *0212223456* |

**Banks Numbers**

| | |
|---|---|
| *Bank of Ceylon, Stanly Road* | *0212222759* |
| *Bank of Ceylon, Super grade* | *0212222636* |
| *Bank of Ceylon, Area Manager* | *0212222735* |
| *Bank of Ceylon, Manipay* | *0212222603* |
| *Bank of Ceylon, Hospital Road* | *0212223126* |
| *Bank of Ceylon, K.K.S Branch* | *0212222182* |
| *Commercial Bank* | *0212222176* |
| *Commercial Bank of Ceylon* | *0212223148* |
| *Hation National Bank* | *0212222787* |
| *Hation National Bank Hospital Road.* | *0212223194* |
| *National Saving Bank* | *0212222696* |
| *People's Bank Regional Manager, Kannathiddy* | *0212222956* |
| *People's Bank,Stanly Road* | *0212222698* |
| *People's Bank,Kannathiddy* | *0212222473* |
| *People's Bank,Jaffna* | *0212222633* |

| | |
|---|---|
| *Librarian University of Jaffna* | *0212222970* |
| *Mayor Municipality, Nallur* | *0212222744* |
| *M.P.C.S Jaffna* | *0212222587* |
| *M.P.C.S Nallur* | *0212222143* |
| *Municipal Commissioner, Jaffna.* | *0212222275* |
| *Municipal Coouncil UDA.* | *0212223269* |
| *Municipal Coouncil Jaffna Medical officer of Health..* | *0212222645* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *N.R.T.B Bus stand* | *0212222187* |
| *N.R.T.B Kondavil* | *0212222281* |
| *N.R.T.B Point pedro* | *0212222877* |
| *NEP co- ordnating Office, Jaffna* | *0212222643* |
| *NHDA, Jaffna* | *0212222275* |
| *Nurses Traning Section, Hospital* | *0212222736* |
| *Piradeshiya Saba, Nallur* | *0212222530* |
| *Piradeshiya Saba, Vali South, West* | *0212222689* |
| *Piradeshiya Saba, Valikamam West* | *0212222706* |
| *Piradeshiya Saba, Vali South, West Manipay* | *0212222681* |
| *Post Office, Jaffna Clock Tower Road* | *0212222708* |
| *Post Office, Sub, Thirunelvely* | *0212222265* |
| *Post Office, Sub, Anaipanthy* | *0212222251* |
| *Post Office, Sub, Vannarpannai* | *0212222253* |
| *Post Office, Sub, Nallur* | *0212222252* |
| *Post Office, Sub, Chundukkuli* | *0212222550* |
| *Post Office, Sub, Kokuvil* | *0212222750* |
| *Post Office, Sub, Manipay* | *0212222650* |
| *Post Office, Sub, Velanai* | *0212222533* |
| *Post Office, Sub, Chavakachcheri* | *0212222035* |
| *Post Office, Division Supt, Kokuvil* | *0212222594* |
| *Post Office, DPGM Brown Road, Jaffna.* | *0212222160* |
| *Post Office, DS Office* | *0212222256* |
| *Post Office, RAO Postal Dept. Jaffna* | *0212222254* |
| *Post Office, Sub, Anaikoddai* | *0212222610* |
| *Post Office, Sub, Buzzar, Jaffna* | *0212222477* |
| *Post Office, Urumpirai* | *0212222447* |
| *Road Development Department, Jaffna.* | *0212222433* |
| *Dean Faculty of Medicine* | *0212222073* |
| *Dean Faculty of Science* | *0212222685* |
| *Dean Faculty of Agriculture* | *0212222973* |
| *Librarian* | *0212222970* |
| *Bursar* | *0212222644* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *Head. Dep of Anatomy* | *0212223073* |
| *Head. Dep of Community Medicine* | *0212222068* |
| *Head. obstetrics and Gynecology* | *0212222545* |
| *Ramanathan Academy of Fine Arts (RAFA)* | *0213212495* |
| *Sidda Medicine* | *0212222483* |
| *Exchange (To all Departments)* | *0212222483* |

## *N.G.O's*

| | |
|---|---|
| *CARE, International* | *0212222438* |
| *CEYNOR, Foundation Ltd* | *0213212733* |
| *Director, Christian Family Service Center* | *0212222855* |
| *FOURT* | *0212222177* |
| *GTZ, Temple Road* | *0212222203* |
| *GTZ, Jaffna* | *0212222238* |
| *GTZ, Kandy Road* | *0212222635* |
| *Gurunagar Fishing Development* | *0212223083* |
| *Human rights Office* | *0212223000* |
| *I.C.R.C Temple Road* | *0212222568* |
| *I.C.R.C* | *0212222026* |
| *Jaipur Foor Programme* | *0212222574* |
| *MSF* | *0212222274* |
| *President Social Development Foundation* | *0212223218* |
| *Refugees Rehablitration Organization* | *0212222416* |
| *RRAN Bunglow* | *0212222135* |
| *RRAN* | *0212222648* |
| *Safe the Childern Fund* | *0212222237* |
| *Sarvodaya District Office* | *0212222351* |
| *SLRC* | *0212222561* |
| *Thrift & credit Co - Posocieties Union* | *0212223131* |
| *UNDP* | *0212222277* |
| *UNHCR* | *0212222005* |
| *UNICEF* | *0212222276* |
| *UNOPS* | *0212223331* |
| *YMHA* | *0212223038* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NEWS PAPER

| | |
|---|---|
| *Uthayan* | *0212229933* |
| | *0212229944* |
| *Elanadu* | *0212225107* |
| *Valampuri* | *0212223378* |
| | *0212227644* |
| *Thinkural* | *0212222127* |
| *Sudar Oli* | *0114734401-6* |
| *Teaching Hospital* | *0212222261* |
| *BloodBank* | *0212223063* |

## UNIVERSITY OF JAFFNA

| | |
|---|---|
| *Vice Chancellor Office* | *0212222294* |
| *Vice Chancellor Fax* | *0212222294* |
| *Vice Chancellor Resi* | *0212222322* |
| *Registrar Office* | *0212222006* |
| *Fax* | *0212222006* |
| *Dean Faculty of Arts* | *0212223091* |
| *Jaffna Teaching Hospital* | *0212222261* |
| | *0212223348* |
| *Nursing Home Thirunelvely* | *0212222263* |
| *Holy Cross* | *0212222512* |
| *Apolo Hospital* | *0212223305* |
| *Sambanthr Clinic* | *0212227259* |
| *Nadanmurugan Dispensary* | *0212223635* |
| *Public Library Jaffna* | *0212222019* |
| *Electricity Board Jaffna* | *0212222498* |
| *Fine brigade of Jaffna* | *0212223556* |
| *Kachcheri of Jaffna* | *0212222235* |
| *Police Station of Jaffna* | *0212222222* |
| *Court of Jaffna* | *0212222026* |
| *Kaithadi Elders Home* | *0213213526* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *People's Bank, University Branch* | *0212222072* |
| *People's Bank, Palaly* | *0212222247* |
| *People's Bank, Zonal Office* | *0212222602* |

## GOVERNMENT DEPARTMENT

| | |
|---|---|
| *A.G.A Office Delft* | *0212223314* |
| *A. Technical Institution* | *0212222595* |
| *Asst. Com.Labour* | *0212222375* |
| *Asst Director National youth service Council* | *0212222526* |
| *Asst Director Dep. Agriculture, Jaffna* | *0212222379* |
| *Asst Director Dep. Anuval Production &Health* | *0212222387* |
| *Asst Director of Agriculture, Jaffna* | *0212222379* |
| *Asst Commissioner Agraian service, Jaffna* | *0212222396* |
| *Asst Commissioner Co- Operative Dev.* | *0212222186* |
| *Asst Commissioner of Local Government* | *0212222654* |
| *Asst. Valuer* | *0212222077* |
| *Building Material Corporation* | *0212222724* |
| *Bursar University of Jaffna* | *0212222644* |
| *Blood Bank, Jaffna Teaching hospital* | *0212223063* |
| *CEB Arasady Road, Jaffna* | *0212222498* |
| *CEB Chavakachcheri* | *0212222216* |
| *CEB AChunnakam* | *0212223001* |
| *Ceylon Petroleum Corporation* | *0212222033* |
| *Chest Clinic* | *0212222494* |
| *Construction Department* | *0212222632* |
| *Co-operative Council* | *0212222324* |
| *CWE (Sathosa)* | *0212222344* |
| *D.G.M Electricity Board* | *0212222496* |
| *Dept. of Technical Education & Training* | *0212222358* |
| *Deputy Post Master General* | *0212222296* |
| *Deputy Provincial Director of Health Service* | *0212222278* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *Cement Corporation* | *0212222239* |
| *Director of Education* | *0212222449* |
| *Director Teaching Hospital* | *0212223348* |
| *District Surveyor Office* | *0212222412* |
| *Divisional Secretarial, Jaffna* | *0212222209* |
| *Divisional Secretarial, Nallur* | *0212222208* |
| *Election Office* | *0212222655* |
| *Election OPS Room* | *0212222227* |
| *Employee Welfare Society Civil Affairs* | *0212222628* |
| *Ex. Engineer, RDA* | *0212222590* |
| *Ex. Engineer, RDA* | *0212222580* |
| *Govt. Farm School* | *0212222174* |
| *Industrial Development Board N.H.D.A Building* | *0212222421* |
| *Irrigation Engineer* | *0212222288* |
| *J.D Co- oprual Bank Union Ltd* | *0212222639* |
| *Jaffna District Agriculture Production* | *0212222662* |
| *Kachcheri Accountant Jaffna* | *0212222771* |
| *Kachcheri, Jaffna G.A* | *0212222355* |
| *Kachcheri A.O, Jaffna* | *0212222775* |
| *Kachcheri G.A Residence* | *0212222205* |
| *Kachcheri P.D, Jaffna* | *0212222774* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் சிந்தனைக்கு..........

| | | | |
|---|---|---|---|
| 1. | மிக நல்ல நாள் | - | இன்று |
| 2. | மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| 3. | மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| 4. | மிகப் பெரிய தேவை | - | சமயோசித புத்தி |
| 5. | மிகவும் கொடிய நோய் | - | பேராசை |
| 6. | மிகவும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| 7. | கீழ்த்தரமான விடயம் | - | பொறாமை |
| 8. | நம்பக் கூடாதது | - | வதந்தி |
| 9. | ஆபத்தினை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| 10. | செய்யக் கூடாதது | - | உபதேசம் |
| 11. | செய்ய வேண்டியது | - | உதவி |
| 12. | விலக்க வேண்டியது | - | விவாதம் |
| 13. | உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| 14. | நழுவவிடக் கூடாது | - | வாய்ப்பு |
| 15. | இளமையில் தேவை | - | கல்வி |
| 16. | உருகும் உள்ளத்தில் உதிப்பது | - | அன்பு |
| 17. | இறுகும் உள்ளத்தில் உதிப்பது | - | அகந்தை |
| 18. | அன்பு விளைவிப்பது | - | ஒற்றுமை |
| 19. | அகந்தை விளைவிப்பது | - | வேற்றுமை |
| 20. | வேற்றுமையில் விளைவது | - | துன்பம் |
| 21. | வருவதும் போவதும் | - | இன்பம், துன்பம் |
| 22. | வந்தால் போகாதது | - | அவமானம், பழி |
| 23. | போனால் வராதவை | - | மானம், உயிர் |
| 24. | தானாக வருவது | - | இளமை, முதுமை |
| 25. | நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| 26. | அடக்க முடியாதது | - | ஆசை, துக்கம் |
| 27. | தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| 28. | நம்மால் பிரிக்க முடியாதது | - | பாசம், பந்தம் |
| 29. | அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| 30. | எல்லோருக்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்





எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
எங்கள் நல்வாழ்விற்காய் வழியமைத்து
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்
கொண்ட எங்கள் குடும்பத் தலைவி

## அமரர்
## பத்மாதேவி பாலசுந்தரம்

அவர்கள் சிவபதம் எய்திய செய்தி கேட்டு உடன் வந்து ஒத்தாசை நல்கிய உற்றார், உறவினர்கட்கும், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் தூரத்தே இருந்து பாசத்தை தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்தோருக்கும், தக்க சமயத்தில் உதவிகள் நல்கியோருக்கும், பத்திரிகை வாயிலாக கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் இம்மலரினைச் சிறப்புற அச்சிட்டுத்தந்த திருவள்ளுவர் அச்சகத்தினருக்கும் எமது துன்பத்தின் மத்தியில் துயர் பகிர்கின்றோம்.

வணக்கம்.

57, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றவருடயதாகிறது,
மற்றொருநாள்
அதுவே வேறொருவருடையதாகும்."
இதுவே உலக நீதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



திருவள்ளுவர் அச்சக[illegible]துறை வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org